©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 7.20 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 9] சென்னை, புதன்கிழமை, மார்ச் 10, 2010
மாசி 26, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது :—**

**சட்டம் எண் 4/2010**

**தமிழ்நாடு மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்விக்கான மாநில மன்றம் ஒன்றை நிறுவுவதற்கும் அதனுடன் தொடர்புடையவையும் அதன் இடைவிளைவாக எழுகின்றவையுமான பொருட்பாடுகளுக்கும் வகை செய்வதற்கானதொரு சட்டம்.**

1986–ஆம் ஆண்டு தேசியக் கல்விக் கொள்கையானது, மாநில அளவில் உயர்கல்விக்கு திட்டமிடுவதையும் அதை ஒருங்கிணைப்பதையும் மாநில உயர்கல்வி மன்றங்களின் மூலம் செய்தல் வேண்டும் என்பதான மற்றும் பல்கலைக்கழக மானிய ஆணையமும் இம்மன்றங்களும் உயர்கல்விக்கான தரநிலைகளின் மீது கண்காணிப்பினைச் செய்வதற்கு ஒருங்கிணைப்பு முறைகளை மேம்படுத்துதல் வேண்டும் என்பதான பரிந்துரைகளைக் கொண்டுள்ளது என்பதாலும்;

மேற்சொன்ன தேசியகொள்கைக்கிணங்க உயர்கல்விக்கான மாநில மன்றங்களை அமைப்பது குறித்துப் பரிந்துரைகளைச் செய்வதற்காகக் குழு ஒன்றை பல்கலைக்கழக மானிய ஆணையமானது அமைத்துருவாக்கியிருப்பதாலும்;

மேற்சொன்ன குழுவானது, மாநில அளவில் உயர்கல்வியை மேம்படுத்துவதற்கும் ஒருங்கிணைப்பதற்கும் மாநில அளவிலான திட்டங்களைப் பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் திட்டங்களுடன் ஒருங்கிணைப்பதற்கும் பயன் விளைவுடைய அமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது இன்றியமையாததொரு தேவையாக இருக்கிறதென்று பரிந்துரை செய்துள்ளதாலும்;

மேற்சொன்ன குழுவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு உயர்கல்விக்கான மாநில மன்றங்களை அமைப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளைப் பல்கலைக்கழக மானிய ஆணையமானது வகுத்துள்ளதாலும்;

மாநில அரசானது, 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தை (தமிழ்நாடு சட்டம் 40/1992) இயற்றியதன் மூலம் தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தை அமைத்துள்ளதாலும்;

தமிழ்நாடு மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்கள் அதிகமான எண்ணிக்கையில் அமைக்கப்பட்டுள்ளன; மற்றும் பல தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களும் அமைத்துருவாக்கப் பட்டுள்ளதாலும்;

மாநில அரசானது இம்மாநிலத்தில் தொழில்நுட்ப கல்வி தொடர்பான பொருட்பாடுகளில் அரசுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் அதன் வளர்ச்சியை தொலைநோக்கு திட்டம் என்பதான பார்வையில் மேற்பார்வையிடுவதற்கும் தொழில்நுட்பக் கல்விக்கான தனி மன்றம் ஒன்றை அமைப்பதென முடிவு செய்துள்ளதாலும்;

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

குறுந்தலைப்பு அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, தமிழ்நாடு மாநிலம் முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாகக் குறிக்கக்கூடிய அத்தகைய தேதியில் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

பொருள் வரையறைகள்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றம்" என்றால் 1987–ஆம் ஆண்டு அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தின் 3–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் எனப் பொருள்படும்; மையச் சட்டம் 52/1987.

(b) "கல்லூரி" என்றால் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் அமைக்கப்படும் அல்லது பேணிவரப்படும் அல்லது அதனால் ஒப்புதல் அளிக்கப்பெற்றுள்ள அல்லது அத்துடன் இணைக்கப்பட்டுள்ள அல்லது தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மற்றும் பட்டங்கள், பட்டயங்கள் அல்லது நேர்விற்கேற்ப பிற கல்வி சிறப்புகளுக்கான தேர்வுகளுக்கு ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல்கள், மேலாண்மை அல்லது உணவாக்கத் தொழில்நுட்பத்தில் குறித்தகாலப் படிப்புபிரிவு அல்லது பயிற்சி எதற்கும் வகை செய்கின்றதுமான கல்லூரி அல்லது நிறுவனம் எனப் பொருள்படும்;

(c) "மன்றம்" என்றால் 3–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம் எனப்பொருள்படும்;

(d) "பட்டம்" என்றால் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றினால் பட்டம் ஒன்று வழங்கப்படுவதான, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல்கள், மேலாண்மை அல்லது உணவுத் தொழில்நுட்பத்தில் குறித்தக் கால படிப்புப்பிரிவு எதுவும் எனப் பொருள்படும்;

(e) "பட்டயம்" என்றால் இடைநிலைப்பள்ளி நிறைவுச் சான்றிதழ் படிப்பிற்குப்பின்னர் பட்டயம் வழங்கப்படுவதற்கான, பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல்கள், மேலாண்மை அல்லது உணவுத் தொழில்நுட்பத்தில் குறித்த காலப் படிப்புப்பிரிவு எதுவும் எனப் பொருள்படும்; ஆனால் அது சான்றிதழொன்றை உள்ளடக்காது;

(f) "அரசு" என்றால் மாநில அரசு எனப் பொருள்படும்;

(g) "உறுப்பினர்" என்றால் இம்மன்றத்தின் ஓர் உறுப்பினர் எனப் பொருள்படுவதோடு அது தலைவரையும், துணைத் தலைவரையும், உறுப்பினர் செயலாளரையும், இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினரையும் உள்ளடக்கும்;

(h) "தனியார் கல்லூரி" என்றால், நிறுவப்பட்டதாயினும் அல்லவாயினும் என்ற நிலையில், நபர் எவராலுமோ அல்லது நபர்களின் கூட்டமைப்பு எதனாலுமோ அமைக்கப்படும் மற்றும் நிர்வகிக்கப்படும் அல்லது பேணிவரப்படும் கல்லூரி ஒன்று எனப்பொருள்படும்; ஆனால் மைய அரசினாலோ அல்லது இந்த அரசினாலோ அல்லது சட்டப்படி அமைக்கப்பட்ட தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் எதனாலுமோ அமைக்கப்படும் மற்றும் நிர்வகிக்கப்படும் அல்லது பேணிவரப்படும் கல்லூரி ஒன்றை உள்ளடக்காது;

(i) "ஒழுங்குமுறை விதிகள்" என்றால் இந்தச் சட்டத்தின்படி இம்மன்றத்தால் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் எனப் பொருள்படும்;

(j) "தொழில்நுட்பக் கல்வி" என்றால் பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல்கள், மேலாண்மை அல்லது உணவுத் தொழில்நுட்பத்தில் குறித்தகாலப் படிப்புப் பிரிவு எதுவும் எனப் பொருள்படும்;

(k) "தொழில்நுட்பப் பல்கலைக்கழகம்" என்றால் சென்னை அண்ணா பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி அண்ணா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழகம், திருநெல்வேலி அண்ணா பல்கலைக்கழகம் அல்லது பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான அறிவியல்கள், மேலாண்மை அல்லது உணவுத் தொழில்நுட்பத்தில் பட்டங்கள், பட்டயங்கள் மற்றும் பிறக் கல்விச் சிறப்புகளை வழங்குவதற்கு தேர்வுகளை நடத்துவதற்காக தமிழ்நாடு மாநிலச் சட்டப் பேரவையால் செய்யப்பட்ட சட்டம் எதனின்படியும் இம்மாநிலத்தில் அமைக்கப்படக்கூடிய அத்தகைய பிற பல்கலைக்கழகம் எனப் பொருள்படும்;

(l) "பல்கலைக்கழக மானிய ஆணையம்" என்றால் 1956–ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணையச் சட்டத்தின் 4–ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட பல்கலைக்கழக மானிய ஆணையம் எனப் பொருள்படும்; மையச் சட்டம் 3/1956.

3. (1) "தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றம்" என்ற பெயரில் மன்றம் ஒன்று அமைக்கப்படுதல் வேண்டும். மாநிலத் தொழில் நுட்பக் கல்வி மன்றத்தை அமைத்தல்.

**(2)** இம்மன்றமானது தொடர்நிலை வழி உரிமைபெற்றதாகவும் தனி இலச்சினை ஒன்று உடையதாகவும் உள்ள ஒரு கூட்டமைப்பாக இருத்தல் வேண்டும் என்பதோடு மேற்சொன்ன பெயரில் வழக்கிடுவதாகவும் வழக்கிடப்படுவதாகவும் இருத்தல் வேண்டும்.

**(3)** இம் மன்றத்தின் தலைமையகம் சென்னையில் அமைந்திருத்தல் வேண்டும்.

4. இம்மன்றமானது பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டதாய் இருத்தல் வேண்டும், அதாவது:— மன்றம் எவரெவரைக் கொண்டிருக்கும் என்பது.

(*a*) தொழில்நுட்பக் கல்வியைப் பொறுப்பில் கொண்டுள்ள அமைச்சர், இம்மன்றத்தின் பதவிவழித் தலைவராக இருப்பார்;

(*b*) இம்மாநிலத்திலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களாய் இருந்திருக்கிற மற்றும் தொழில்நுட்பக் கல்வித் துறையில் பட்டறிவு கொண்டிருக்கிற மற்றும் எழுபது வயதினை நிறைவடைந்திராத நபர்களுக்கிடையே இருந்து அரசினால் துணைத்தலைவர் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(*c*) உயர்கல்வித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் **பதவிவழியாக;**

(*d*) நிதித் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் **பதவிவழியாக;**

(*e*) தொழில் துறையைப் பொறுப்பில் கொண்டுள்ள அரசுச் செயலாளர் **பதவிவழியாக;**

(*f*) பல்கலைக்கழக மானிய ஆணையத்தின் செயலாளர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவர், **பதவிவழியாக;**

(*g*) அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றத்தின் உறுப்பினர் செயலர் அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படுபவர், **பதவிவழியாக;**

(*h*) தொழில்நுட்பக் கல்வி ஆணையர் அல்லது இயக்குநர், **பதவிவழியாக;**

(*i*) தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்;

(*j*) கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் இயக்குநர்களுக்கிடையே இருந்து அரசினால் நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள்; அவர்களில் ஒருவர், அரசினால் அமைக்கப்பட்டு மற்றும் நிருவகிக்கப்பட்டு அல்லது பேணிவரப்படும் கல்லூரி ஒன்றிலிருந்தும் மற்றொருவர் தனியார் கல்லூரி ஒன்றிலிருந்தும் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(*k*) பட்டயம் ஒன்று வழங்கப்படுகிற குறித்தகாலப் படிப்புப் பிரிவு எதனையும் வழங்குகிற கல்லூரிகளின் முதல்வர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள், அவர்களில் ஒருவர், அரசினால் அமைக்கப்பட்டு மற்றும் நிருவகிக்கப்பட்டு அல்லது பேணிவரப்படும் கல்லூரி ஒன்றிலிருந்தும் மற்றொருவர் தனியார் கல்லூரி ஒன்றிலிருந்தும் நியமிக்கப்படுதல் வேண்டும்;

(*l*) மேலாண்மையில் குறித்தகாலப் படிப்புப் பிரிவுகளை வழங்குகிற கல்லூரிகளின் முதல்வர்கள் மற்றும் இயக்குனர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(*m*) தொழில்நுட்பக் கல்வித் துறையில் புகழ்வாய்ந்த கல்வியாளர்களுக்கிடையே இருந்து அல்லது கல்வித் துறை நிருவாகிகளுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(*n*) தொழில்நுட்பக் கல்வித் துறையில் இருந்து புகழ்வாய்ந்த அறிவியலாளர்களுக்கிடையே இருந்து அல்லது பொறியியலாளர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(*o*) தொழில்நுட்பக் கல்விக்காக தொண்டாற்றி, பங்காற்றியுள்ள, உயர்புகழ் வாய்ந்த தொழிலதிபர்களுக்கிடையே இருந்து அரசினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர் ஒருவர்;

(*p*) இம்மன்றத்தினால் இசைந்து சேர்த்துக் கொள்ளப்படும், மூவருக்கு மேற்படாத தொழில் நுட்பக் கல்வித் துறையில் புகழ்வாய்ந்த கல்வியாளர்கள்; மற்றும்

(*q*) தொழில்நுட்பக் கல்வித் துறையில் பட்டறிவு கொண்டுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியர் படிநிலைக்குக்கீழ் அல்லாத படிநிலையில் அரசினால் நியமிக்கப்படும் முழு நேர உறுப்பினர்–செயலர் ஒருவர்.

மன்றத்தின் உறுப்பினராக இருப்பதற்குத் தகுதிக்கேடு.

5. நபர் ஒருவர்,—

(*a*) அவர் மனச்சீர் கேடுற்றவராக இருப்பாராயின்;

(*b*) நொடித்த நிலையராக நீதிமுறையில் தீர்மானிக்கப்படுவதற்கான ஒரு விண்ணப்பதாரராகவோ அல்லது விடுவிக்கப்படாததொரு நொடித்த நிலையராகவோ இருப்பாராயின்;

(*c*) சட்டம் எதன்படியேனும் சிறைத்தண்டனை விதித்துத் தண்டிக்கப்பட தக்கதான ஒழுக்கக் கேட்டை உள்ளடக்கிய குற்றச் செயல் எதற்காகவேனும் அவருக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்து, அத்தகைய தண்டனை நீக்கப்படாமலும் அந்த தண்டனை முடிவடைந்த தேதியிலிருந்து ஐந்தாண்டு கால அளவு முடிவடையாமலும் இருக்குமாயின்;

(*d*) அவர் இம்மன்றத்தின் ஊதியம் பெறும் அலுவலராகவோ அல்லது பணியாளராகவோ இருப்பாராயின்; அல்லது

(*e*) அவர் அரசினால் வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய பிற தகுதிக்கேடுகளுக்கு உள்ளானவராயிருப்பாராயின்.

இம்மன்றத்தின் துணைத் தலைவராக நியமிக்கப் படுவதற்கோ உறுப்பினராகப் பெயர் குறித்து நியமிக்கப்படுவதற்கோ அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்படுவதற்கோ அல்லது அத்தகைய துணைத் தலைவராக அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினராக இருப்பதற்கோ தகுதிக் கேடுற்றவராவார்.

துணைத் தலைவருக்கான மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர்–களுக்கான மற்றும் இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்–களுக்கான பணி வரையறைகளும் நிபந்தனைகளும்.

6. **(1)** துணைத் தலைவர், பெயர் குறித்து நியமிக்கப்பட்ட மற்றும் இசைந்துச் சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்கள் மூன்றாண்டுக் காலத்திற்கும் பதவி வகித்தல் வேண்டும்; மற்றும் மேலுமொரு மூன்றாண்டுக் காலத்திற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு அல்லது மீண்டும் பெயர் குறித்து நியமனம் செய்யப்படுவதற்கு அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுடையவராவார்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக, தற்செயல் காலியிடமொன்றில் ஓர் ஆண்டிற்குக் குறையாத கால அளவிற்கு துணைத் தலைவராக அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்டவராக அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்டவராக பதவி வகித்த உறுப்பினர் ஒருவர், அப்பதவியின் முழுமையான கால அளவிற்கு பதவி வகித்துள்ளவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**(2)** துணைத் தலைவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர், தன் கைப்பட எழுத்து வாயிலாக அரசுக்கு அல்லது நேர்விற்கேற்ப மன்றத்திற்கு முகவரியிட்டுத் தெரிவிப்பதன் வாயிலாகத் தனது பதவியிலிருந்து விலகலாம்; ஆனால் அவர்தம் பதவி விலகலானது அரசினால் அல்லது நேர்விற்கேற்ப மன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும் வரையில் அவர் பதவியில் தொடர்ந்து இருந்து வருதல் வேண்டும்.

**(3)** இந்தப்பிரிவின் வகைமுறைகளுக்குட்பட்டு, துணைத் தலைவரின் மற்றும் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர்களின் பணி வரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

**(4)** துணைத் தலைவர், வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைச் செலுத்துதலும், அலுவல்களை ஆற்றுதலும் வேண்டும்.

உறுப்பினர்–செயலாளரின் பணி வரையறைகளும் நிபந்தனைகளும்.

7. **(1)** உறுப்பினர்–செயலாளரின் பதவிக்கான பணிவரையறைகளும் நிபந்தனைகளும் வகுத்துரைக்கப்படக் கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

**(2)** உறுப்பினர்–செயலாளரானவர், இந்தச் சட்டத்தின்படி வழங்கப்பட்ட அதிகாரங்களையும் விதிக்கப்பட்ட அலுவல்களையும் மற்றும் வகுத்துரைக்கப் படக்கூடிய அத்தகைய பிற அதிகாரங்களையும் அலுவல்களையும் செலுத்தி வருதலும் புரிந்து வருதலும் வேண்டும்.

8. துணைத்தலைவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர் ஒருவர் தம்மைப் பதவியிலிருந்து நீக்குவதைத் தகுந்ததாய் ஆக்குகின்ற அளவிற்குத் தன்னுடைய பதவிக்குத் தான் பொருத்தமற்றவராக வெளிப்படுத்திக் கொள்கின்றார் என்றோ, தவறான நடத்தை அல்லது அசட்டைக் குற்றம் எதையேனும் புரிந்த குற்றவாளியாக இருக்கின்றார் என்றோ, அரசுக்கு எந்த சமயத்திலேயும் தோன்றுமானால் அரசு நேர்விற்கேற்ப துணைத்தலைவர் அல்லது அத்தகைய பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினருக்குக் காரணம் காட்டக் கோருகின்ற நியாயமான வாய்ப்பு ஒன்றினைக் கொடுத்த பின்பு, அறிவிக்கையின் வாயிலாக நேர்விற்கேற்ப துணைத்தலைவர் அல்லது அத்தகைய பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்கலாம். மன்ற உறுப்பினரைப் பதவியிலிருந்து நீக்குதல்.

9. மரணம், பதவி விலகல், பதவி நீக்கம் என்கின்ற காரணத்தாலோ அல்லது மற்றபடியோ துணைத்தலைவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினரின் பதவியில் தற்செயல் காலியிடம் ஒன்று ஏற்படுமானால், அத்தகைய காலியிடமானது, கூடிய விரைவில் அரசினால் அல்லது நேர்விற்கேற்ப மன்றத்தினால் நிரப்பப்படுதல் வேண்டும்; மற்றும் அத்தகைய துணைத்தலைவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினர், எவருடைய இடத்தை அவர் நிரப்புகிறாரோ, அவர் எஞ்சிய எவ்வளவு காலத்திற்கு நேர்விற்கேற்ப, துணைத்தலைவர் அல்லது பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது இசைந்து சேர்த்துக் கொள்ளப்பட்ட உறுப்பினராக இருந்திருப்பாரோ அவ்வளவு காலத்திற்கு மட்டுமே பதவி வகிப்பார். தற்செயல் காலியிடத்தை நிரப்புதல்.

10. (1) கல்லூரிகளில் தரநிலைகளை ஒருங்கிணைத்துத் தீர்மானிப்பதும் தொழில் நுட்பக் கல்வியில் அறிவியல் ஆராய்ச்சிகளை ஒருங்கிணைப்பதும் இம்மன்றத்தின் பணிகளாக இருக்கும். மன்றத்தின் அதிகாரங்களும் பணிகளும்.

மையச் சட்டம் 3/1956 மையச் சட்டம் 52/1987. (2) 1956-ஆம் ஆண்டு பல்கலைக்கழக மானிய ஆணையச் சட்டத்தின் மற்றும் 1987-ஆம் ஆண்டு அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்வி மன்றச்சட்டத்தின் வகைமுறைகளுக்குட்பட்டு, இம்மன்றமானது,–

(a) இம்மாநிலத்தின் தொழில்நுட்பக் கல்விக்கான ஒட்டுமொத்தமான முன்னுரிமை அடிப்படையிலான தேவைகளையும் தொலைநோக்கு வாய்ப்புகளையும் பல்கலைக்கழக மானிய ஆணையத்தாலும் அகில இந்திய தொழில்நுட்பக் கல்வி மன்றத்தாலும் அவ்வப்போது பிறப்பிக்கப்படக்கூடிய வழிகாட்டு நெறிமுறைகளுக் கிணங்கிய வகையில் இம்மாநிலத்தின் தொழில்நுட்ப கல்வித்துறையால் ஒருங்கிணைந்த செயல்திட்டங்களைத் தயாரித்தலும் அவற்றை நிறைவேற்றுவதில் உதவுதலும் வேண்டும்;

(b) கல்வித்தரங்களை முடிவு செய்வதையும் பேணிவருவதையும் பொறுத்த அளவில் பல்கலைக்கழக மானிய ஆணையத்திற்கும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றத்திற்கும் உதவுதலும் மற்றும் தேவைப்படுமிடத்தெல்லாம் தீர்வு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு யோசனை கூறுதலும் வேண்டும்;

(c) இம்மாநிலத்தில் தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கான தொலைநோக்கு வாய்ப்புத்திட்டங்களை உருவாக்குதல் வேண்டும்;

(d) தொழில் நுட்பப் பல்கலைக் கழங்களின் மற்றும் கல்லூரிகளின் வளர்ச்சிச் செயல் திட்டங்களை தன் கருத்துரைகளுடனும் பரிந்துரைகளுடனும் சேர்த்து பல்கலைக்கழக மானிய ஆணையத்திற்கும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்வி மன்றத்திற்கும் அனுப்பி வைத்தல் வேண்டும்;

(e) அத்தகைய வளர்ச்சிச் செயல் திட்டங்களை நிறைவேற்றுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் கண்காணித்து வருதல் வேண்டும்;

(f) கல்லூரிகளுக்கிடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் வளர்த்தலும் தொழில் பிரிவு மற்றும் தொடர்புடைய பிற அமைப்புகளுக்குமிடையே ஒன்றுக்கொன்று இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பினைக் கண்டறிதலும் வேண்டும்;

(g) அரசினாலும் பல்கலைக்கழக மானிய ஆணையத்தாலும் அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்வி மன்றத்தாலும் பிறப்பிக்கப்படும் வழிகாட்டு நெறிகளுக்கிணங்க புதிய கல்லூரிகளைத் தொடங்குவதற்கான கொள்கை நெறிகளை உருவாக்குதல் வேண்டும்;

(h) இம்மாநிலத்தின் தொழில்நுட்பக் கல்விக்கான கூடுதல் வளவசதிகளைப் பெருக்குவதற்கான வழிவகைகளுக்கு யோசனை கூறுதல் வேண்டும்;

(i) தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களில் குறித்தகால படிப்புப் பிரிவுகளைப் புனரமைத்து பாடதிட்டங்களை நவீனப்படுத்தி கல்வி சார் வளர்ச்சியில் புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவித்து வளர்த்து வருதல் வேண்டும்;

(j) தன்னாட்சி பெற்ற கல்லூரிகளின் செயல் திட்டங்களை வளர்த்தலும் ஒருங்கிணைத்தலும் மற்றும் அது நிறைவேற்றப்படுதலைக் கண்காணித்து வருதலும் வேண்டும்;

(k) தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் தேர்வுகளின் தரங்களை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வகுத்தமைத்தலும் தேவையான சீர்திருத்தங்களுக்கு யோசனை கூறுதலும் வேண்டும்;

(l) தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் உள்ள ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கு வழிசெய்தலும் ஒருங்கிணைப்பு நடவடிக்கையின் மூலமாக ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் செயற்பட்டு வருதலைக் கண்காணித்து வருதலும், மற்றும் தரமான பாடப்புத்தகங்கள், தனி வரைவு நூல்கள், பார்வைப் புத்தகங்கள் ஆகியவை வெளியிடப்படுவதை ஊக்குவித்து வளர்த்தலும் வேண்டும்;

(m) தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளில் உள்ள புலங்களுக்கிடையே பயனுள்ள வகையிலான கல்விப் பிரிவு ஒத்துழைப்பிற்கும் ஒன்றுக்கொண்டு இயைந்த செயற்பாட்டுக்குமான செயல் திட்டங்களை மேம்படுத்துவதற்கும் வகை செய்வதோடு இம்மாநிலத்திற்கு உள்ளேயும் வெளியேயும் ஆசிரியர்களும் மாணவர்களும் எளிதாக இடமாறுவதற்கும்கூட வகை செய்தலும் வேண்டும்;

(n) தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை முறைப்படுத்துதல் வேண்டும்;

(o) தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், விளையாட்டுப் போட்டிகள், விளையாட்டுகள், உடற்பயிற்சிக் கல்வி, பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகியவற்றை ஊக்குவித்தல் வேண்டும்;

(p) விரிவாக்க நடவடிக்கைகளை ஊக்குவித்தலும் தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களுக்குத் தொடர்புடைய சிறப்புத் துறைகளிலுள்ள செயலார்ந்த ஆலோசனைப் பிரிவுகளின் மூலமாக தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களும் தொழில் பிரிவுகளும் தங்களுக்கிடையே ஒன்றோடு ஒன்று இணைந்து செயற்படுவதையும் வட்டாரத் திட்டமிடும் வளர்ச்சியையும் மேம்படுத்துதலும் வேண்டும்;

(q) இம்மாநிலத்திலுள்ள தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும் செயற்பட்டு வருவதன் மீது கண்காணிப்பு அறிக்கை ஒன்று தயாரித்தலும் அந்த அறிக்கையின் படி ஒன்றை அரசுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்;

(r) தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களில் உள்ள தனிச்சிறப்பு மையங்களை அடையாளம் காணுதலும் முதன்மைப் பிரிவுகளில் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு நாட்டு அளவிலும் பன்னாட்டு அளவிலும் இணைப்பிற்கு வகை செய்தலும் வேண்டும்;

(s) ஒட்டுமொத்த பராமரிப்பு மானிய அளிப்பினைத் தீர்மானிப்பதில் அரசுக்கு யோசனை கூறுதலும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் அத்தகைய மானியங்களை வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்தமைத்தலும் வேண்டும்;

(t) இம்மாநிலத்தின் ஒட்டுமொத்த ஆராய்ச்சித் தேவைகளைக் கருத்திற்கொண்டு, தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களின் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஆராய்ச்சி முகவாண்மைகள் மற்றும் தொழிற்பிரிவுகளின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுடன் இணைக்கும் வகையில் மாநிலத் தொழில்நுட்ப ஆராய்ச்சிக் குழுமம் ஒன்றை அமைத்தலும் நாட்டு அளவிலும் பன்னாட்டு அளவிலும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களில் அறிவியல் ஆராய்ச்சிகளை வளர்ப்பதற்காக ஆராய்ச்சி நிதியங்களை ஒன்றிணைத்தலும் வேண்டும்;

(u) இம்மாநிலத்திலுள்ள (மையப் பல்கலைக் கழகங்கள் நீங்கலான) தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களின் நிலைமுறை விதிகள், அவசர விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் இம்மாநிலத்திலுள்ள தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களால் முன்மொழியப்படும் நிலைமுறை விதிகள் ஆகியவற்றைப் பரிசீலனை செய்து கல்வி சார் பயில்முயற்சிகளில் சுதந்திரமாகச் செயல்படுவதற்கு ஊறின்றி, நிர்வாகத்தில் ஒரு சீர்மை பேணுவதற்கான மாறுதல்களுக்கு யோசனை கூறுதல் வேண்டும்;

(v) இம்மாநிலத்திலுள்ள திட்டங்களை உருவாக்குவதில் அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்வி மன்றத்துடன் இணைந்து செயற்படுதல் வேண்டும்;

(w) புதிய கல்லூரிகள் தன்னிறைவுப் பெற்றவையாகவும் நிலைத்தன்மைப் பெற்றவையாகவும் இருப்பதற்கான வழிமுறைகளுக்கு அரசுக்கு யோசனை கூறுதல் வேண்டும்;

(x) “பயிலும் போதே ஊதியம் ஈட்டுதல்'' என்னும் கொள்கையின் பேரில் அரசுக்கு ஆலோசனை கூறுதல் வேண்டும்;

(y) தொழில்நுட்பப் பல்கலைக்கழக அமைப்பிற்கு உள்ளேயாயினும் அல்லது வெளியேயாயினும் அணுமூலக்கூறு சார்ந்த உயிரியியல், மரபு வழி பண்பியற் பிரிவு, காற்றுமண்டல படிப்பியற் பிரிவு, உயிற்கூறு தொழில் நுட்பவியல் மற்றும் அவை போன்ற முதன்மை அறிவு சார் துறைகளில் சிறப்புமிகு நிலையங்களைத் தோற்றுவித்தல் வேண்டும்;

(z) புதிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகங்களை நிறுவுவது தொடர்பான சட்டங்கள் உள்ளடங்கலான, தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்கள் தொடர்பான சட்டங்களுக்கான மேம்பாடுகள் குறித்து அரசிற்கு யோசனைகள் கூறுதல் வேண்டும்;

(aa) தலைசிறந்த அறிவியலாளர்கள், கல்வியாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோருக்கு, அவரவர் துறைகளில் ஆற்றியுள்ள தொண்டிற்காக மதிப்புமிகு பரிசுகளை நிறுவியமைத்தல் வேண்டும்;

(ab) தொழிற் பிரிவுகள், கல்வி நிலையங்கள், நாட்டு அமைப்புகள், பன்னாட்டு அமைப்புகள் ஆகியவற்றுக்கு ஆலோசனை வழங்குதல் போன்ற பணிச் சேவைகளிலிருந்து தானாகவே பெருகுகின்ற நிதியங்களின் மூலமாக தொடர்ச்சியான வளர்ச்சிக்கான புதிய செயல் திட்டங்களை அடையாளம் கண்டு நிருவகித்து வருதல் வேண்டும்;

(ac) நாட்டு நிதியளிப்பு மற்றும் பன்னாட்டு நிதியளிப்பு நிறுவனங்களிடமிருந்து பெற்ற ஆராய்ச்சி நிதியங்களை நிருவகித்து வருதலும் அவற்றை வழங்குதலும் வேண்டும்;

(ad) அரசுக்கோ தொழில்நுட்பப் பல்கலைக் கழகம் அல்லது கல்லூரிகள் எவற்றுக்குமோ இம்மன்றத்திடம் அவை குறிப்பிட்டு அனுப்பக்கூடிய தொழில்நுட்பக் கல்வி மற்றும் ஆராய்ச்சி தொடர்பான பிற பொருட்பாடு எதன்மீதும் ஆலோசனை கூறுதல் வேண்டும்; மற்றும்

(ae) தொழில்நுட்பக் கல்வியிலும் அறிவியல் ஆராய்ச்சியிலும் மேன்மையை வளர்ப்பதிலும் வகுத்துரைக்கப்படக்கூடிய பிற அலுவல்களைப் புரிந்து வருதல் வேண்டும்.

மன்றத்தின் கூட்டங்கள்.

11. இம்மன்றமானது தேவையாயிருக்கக் கூடிய அளவிற்கு, ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்படக்கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் கூடுதல் வேண்டும் என்பதோடு வகை செய்யப்படக் கூடிய நடைமுறை விதிகளையும் பின்பற்றிவருதலும் வேண்டும்:

**வரம்புரை:** ஆனால், இம்மன்றமானது குறைந்தது மூன்று திங்களுக்கொருமுறையாவது கூடுதல் வேண்டும்.

மன்றத்தின் பணியாளர்கள்.

12. **(1)** இம்மன்றமானது தனது அலுவல்களைத் திறம்பட புரிந்து வரும்பொருட்டு தேவையாயிருக்கக்கூடிய எண்ணிக்கையில் பணியாளர்களை நியமித்தல் வேண்டும். இம்மன்றத்தின் பணியாளர்களின் பணிபற்றிய வரைக் கட்டுகளும் நிபந்தனைகளும் ஒழுங்குமுறை விதிகளில் வகை செய்யப்படக்கூடியவாறாக இருத்தல் வேண்டும்.

**(2)** இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் மற்றும் பிற பணியாளர்களைப் பொறுத்த அளவிலான ஆட்சேர்ப்பு வகைப்பாடு மற்றும் முறைகள், பணிபற்றிய நிபந்தனைகள், சம்பளம் மற்றும் படிகள் ஒழுங்குமுறை மற்றும் நடத்தை ஆகியன வகுத்துரைக்கப்படக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

குறிப்பிட்ட நோக்கத் திற்காக மன்றத்துடன் நபர்களைத் தற்காலிகமாக இணைத்துக் கொள்ளுதல்.

13. **(1)** மன்றமானது, ஒழுங்குமுறை விதிகளால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய முறையிலும் அத்தகைய நோக்கங்களுக்காகவும் அது விரும்புகிறவாறு உதவி அல்லது ஆலோசனைப் பெறுவதற்கு நபர் எவரையும் அதனோடு இணைத்துக் கொள்ளலாம்.

**(2)** நோக்கம் எதற்காகவும், இணைத்துக்கொள்ளப்பட்ட நபர் ஒருவர், அந்த நோக்கத்திற்குத் தொடர்புடைய கலந்துரையாடல்களில் பங்கெடுத்துக் கொள்ள உரிமை பெற்றிருத்தல் வேண்டும்; ஆனால் மன்றத்தின் கூட்டம் ஒன்றில் வாக்களிப்பதற்கு உரிமை பெற்றிருத்தல் கூடாது.

மன்ற வரவு–செலவுத் திட்டம்.

14. இம்மன்றமானது, மதிப்பிடப்பட்ட வரவு–செலவைக் காட்டுகின்ற அடுத்த நிதியாண்டைப் பொறுத்த அளவிலான வரவு–செலவுத் திட்டமொன்றை வகுத்துரைக்கப்படக்கூடிய வடிவத்திலும் நேரத்திலும் தயாரித்தல் வேண்டும் என்பதோடு அந்த வரவு–செலவு திட்டத்தின் படியொன்றை அரசுக்கு அனுப்பி வைத்தலும் வேண்டும்.

மன்றத்தின் நிதியம்.

15. **(1)** இம் மன்றமானது தனக்கென சொந்த நிதியத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்; மற்றும் அவ்வப்போது அரசினால் தனக்கு வழங்கி வரப்படக்கூடிய தொகைகள் அனைத்தும் (மைய அரசு, பல்கலைக்கழக மானிய ஆணையம், அல்லது பிற அதிகார அமைப்பு எதுவும் அல்லது நபர் எவரும் இம்மன்றத்திடம் கொடுக்கக்கூடிய தொகை எதுவும் உள்ளடங்கலாக) மற்றும் இம்மன்றத்தின் வரவுகள் அனைத்தும் அத்தகைய நிதியத்தின் வரவில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(2) இந்தச் சட்டத்தின்படி இம்மன்றத்தின் அலுவல்களைப் புரிந்து வருவதற்காக, இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து ஐந்தாண்டுகள் என்பதான ஒரு கால அளவிற்கு அரசு தேவையெனக் கருதக்கூடிய மானியங்கள், வளர்ச்சி மானியங்கள், ஈடுசெய் மானியங்கள் ஆகியவற்றை ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசானது இம்மன்றத்திற்கு வழங்குதல் வேண்டும்.

(3) மன்றத்தில் தமது நிறுவன உறுப்பினர் நிலைக்காக ஆண்டுச் சந்தாவாக மன்றத்திற்கு அனைத்துத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களும் ஆண்டொன்றுக்கு ஓர் இலட்ச ரூபாயைப் பங்களிப்பாகச் செலுத்துதல் வேண்டும்; பட்டம் வழங்கப்படுகிற குறித்தகாலப் படிப்பினை வழங்குகிற கல்லூரிகள் ஆண்டொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாயைப் பங்களிப்பாகச் செலுத்துதல் வேண்டும்; பட்டயம் வழங்கப்படுகிற குறித்தகாலப் படிப்பு எதனையும் வழங்குகிற கல்லூரிகள் ஆண்டொன்றுக்கு இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாயைப் பங்களிப்பாகச் செலுத்துதல் வேண்டும்; அவை நிதியத்தின் கணக்கில் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படியோ அல்லது அதன் நோக்கங்களுக்காகவோ இம்மன்றத்திற்கு நேருகிற செலவுகள் அனைத்தும் மேற்சொன்ன நிதியத்திலிருந்து செலவிடப்படுதல் வேண்டும் என்பதோடு, அத்தகைய செலவினைச் செய்தபின்னர் எஞ்சிய நிலையில் மிகுதியாக உள்ள தொகை எதுவும் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய முறையில் முதலீடு செய்யப்படுதல் வேண்டும்.

(5) மன்றமானது, இந்தச் சட்டத்தின்படியான செயற்பணிகளை ஆற்றுவதற்குத் தக்கதென அது கருதுகிற அத்தகைய தொகைகளைச் செலவு செய்யலாம்; மற்றும் அத்தகைய தொகைகள் மன்றத்தின் நிதியத்திலிருந்து செலுத்தத்தக்க செலவினமாகக் கருதப்படுதல் வேண்டும்.

பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் உதவி மானியங்களை வழங்குதல்.

16. இம்மாநிலத்திலுள்ள பல்வேறு தொழில் நுட்பப் பல்கலைக்கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் மன்றத்தினால் 15–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின்படி பெறப்பட்ட நிதியங்களிலிருந்து மானியங்களை ஒதுக்கீடு செய்வது மன்றத்தின் பணியாக இருத்தல் வேண்டும்; மற்றும் மன்றமானது அதனைத் தொடர்பான தொழில்நுட்பப் பல்கலைக் கழகங்களுக்கும் கல்லூரிகளுக்கும் வழங்குதல் வேண்டும்.

ஆண்டு கணக்குகளும் தணிக்கையும்.

17. (1) இம்மன்றத்தின் கணக்குகள், வகுத்துரைக்கப்படக் கூடிய அத்தகைய முறையிலும் அத்தகைய படிவத்திலும் பேணிவரப்படுதல் வேண்டும். இம்மன்றம் வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் ஆண்டுக் கணக்கு விவர அறிக்கையொன்றைத் தயாரித்தல் வேண்டும்.

(2) மன்றத்தின் கணக்குகள், அரசு பணிக்கக்கூடியவாறான அத்தகைய ஆய்விற்கும் தணிக்கைக்கும் குறைந்தது ஓர் ஆண்டிற்கு ஒரு முறை பணிந்தனுப்பப்படுதல் வேண்டும்.

(3) இம்மன்றத்தின் உறுப்பினர்–செயலாளர், தணிக்கையாளரின் அறிக்கையினை அச்சிடுவதற்கு ஆவன செய்தல் வேண்டும்; அச்சிடப்பட்ட படியொன்றினை ஒவ்வொரு உறுப்பினருக்கும் அனுப்புதல் வேண்டும்; மற்றும் இம்மன்றத்தின் அடுத்தக் கூட்டத்தில் பரிசீலனைக்காக அதன் முன்னர் அத்தகைய அறிக்கையை வைத்தல் வேண்டும்.

(4) இம்மன்றமானது, தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்படக்கூடிய குறை அல்லது முறைகேடு எதனையும் தீர்வு செய்வதற்காக உரிய நடவடிக்கையை உடனடியாக எடுத்தல் வேண்டும்.

(5) இம்மன்றத்தின் கணக்குகள் தணிக்கை அறிக்கையுடனும் அதன் மீதான இம்மன்றத்தின் குறிப்புரைகளுடனும் சேர்த்து, வகுத்துரைக்கப்படக்கூடிய காலத்திற்குள் அரசுக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(6) அரசானது, எழுத்துருவிலான ஆணையின் மூலம், அதில் குறித்துரைக்கப்படக்கூடிய காலத்திற்குள், தணிக்கை அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்ட குறைபாடுகள் எவையேனும் இருப்பின் அவற்றைத் தீர்வு செய்ய, அந்த ஆணையில் குறித்துரைக்கப்படக்கூடிய நடவடிக்கையினை எடுக்குமாறு இம்மன்றத்தினைப் பணிக்கலாம்; மற்றும் இம்மன்றம், அத்தகைய பணிப்புரைக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

ஆண்டு அறிக்கை.

18. இம்மன்றமானது, எவ்வளவு விரைவில் இயலுமோ அவ்வளவு விரைவில் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதிக்குப் பின்பும், முந்தைய ஆண்டின் போதான தன்னுடைய நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களைத் தருகின்ற அறிக்கையொன்றை வகுத்துரைக்கப்படக்கூடிய அத்தகைய தேதிக்கு முன்பாகவும் அத்தகைய வகுத்துரைக்கப்படக்கூடிய படிவத்திலும் தயாரித்து அரசுக்குப் பணிந்தனுப்புதல் வேண்டும். மேலும் அந்த அறிக்கையானது, அடுத்த நிதியாண்டில் இம்மன்றத்தினால் பெரும்பாலும் மேற்கொள்ளப்படவிருக்கின்ற நடவடிக்கைகள் எவையேனும் இருப்பின், அவற்றைப் பற்றிய விவரங்களையும் தருதல் வேண்டும். அரசானது அத்தகைய அறிக்கை ஒவ்வொன்றையும், அது வரப்பெற்றதற்குப் பின்பு கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பதற்கு ஆவன செய்தல் வேண்டும். அந்த ஆண்டறிக்கையின் படியொன்று பல்கலைக்கழக மானிய ஆணையத்திற்கும் அகில இந்தியத் தொழில்நுட்ப கல்வி மன்றத்திற்கும் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்புரைகளைப் பிறப்பிப்பதற்கான அதிகாரம்.

**19.** அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையானவையென அல்லது உகந்தவையெனத் தான் கருதும் அத்தகைய பணிப்புரைகளை இம்மன்றத்திற்குப் பிறப்பிக்கலாம்; மற்றும் இம்மன்றமானது அத்தகைய பணிப்புரைகள் அனைத்திற்கும் செயல்வடிவம் கொடுத்தல் வேண்டும்.

ஆய்வு செய்தலும் விசாரணை செய்தலும்.

**20. (1)** அரசானது, அதனால் அதிகாரம் அளிக்கப்பட்ட அரசுச் செயலாளரின் படிநிலைக்குக் கீழ் அல்லாத படிநிலையிலுள்ள அலுவலர் ஒருவரால் மன்றத்தின் ஆய்வினைச் செய்விக்க உரிமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்; மற்றும் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட பொருட்பாடு எதனையும் பொருத்த அளவில் இம்மன்றத்தினால் செய்யப்பட்ட பணிகளைக் குறித்த விசாரணை ஒன்றையும் கூடச் செய்விக்கலாம். அரசானது, ஒவ்வொரு நேர்விலும் அத்தகைய ஆய்வினைச் செய்வதற்கு அல்லது விசாரணையைச் செய்வதற்காக தனது உட்கருத்தினை மன்றத்திற்கு அறிவிப்பின் மூலம் தெரிவிக்க வேண்டும்; மற்றும் மன்றமானது அதில் தன்னைச் சார்பாற்றம் செய்து கொள்வதற்கு உரிமைத் தகுதி உடையதாக இருத்தல் வேண்டும்; ஆய்வினை அல்லது விசாரணையினைச் செய்யும் அலுவலரானவர், அதன் மீதான முடிவுகளைக் குறித்து அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**(2)** அரசானது அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் பேரிலான முடிவுகள் தொடர்பான தனது கருத்துக்களை மன்றத்திற்குத் தெரிவித்தல் வேண்டும்; மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையைக் குறித்து மன்றத்திற்கு ஆலோசனை வழங்கலாம்.

**(3)** மன்றமானது அரசு நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய காலத்திற்குள்ளாக அத்தகைய ஆலோசனையின் பேரில் எடுக்கக் கருதப்பட்டுள்ள அல்லது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை ஏதேனும் இருப்பின் அந்த நடவடிக்கை குறித்து அரசுக்குத் தெரிவித்தல் வேண்டும்.

**(4)** மன்றத்தினால் அரசு நிறைவடையும் வகையில் நியாயமான காலத்திற்குள்ளாக நடவடிக்கையானது எடுக்கப்பட்டிராதவிடத்து, அரசானது, அது தக்கதெனக் கருதுகிறவாறான அத்தகைய பணிப்பாணையைப் பிறப்பிக்கலாம்; மற்றும் மன்றமானது அத்தகைய பணிப்பாணைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

சீராய்வு.

**21.** அரசானது, தாமாகவே முற்பட்டோ அல்லது அதற்குச் செய்யப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ இந்தச் சட்டத்தின் வகைமுறைகளின்படி இம்மன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது எடுக்கப்பட்ட முடிவின் சட்டமுறைமை அல்லது தகுதியுடமை குறித்தோ அல்லது அத்தகைய நடைமுறையின் ஒழுங்குமுறைமை குறித்தோ தாம் நிறைவுறும் நோக்கத்திற்காக, அவ்வாறு பிறப்பிக்கப்பட்ட ஆணை அல்லது எடுக்கப்பட்ட முடிவு எதனின் பதிவுருக்களையும் கோரிப் பெற்று ஆய்வு செய்து அது பொருத்தமெனக் கருதுகிறவாறு அதனைப் பொறுத்தவரையிலான அத்தகைய ஆணையைப் பிறப்பிக்கலாம்:

**வரம்புரை:** ஆனால், மன்றத்திற்கு அல்லது அதனால் பெரும்பாலும் பாதிக்கப்படக்கூடிய நபருக்குத் தமது தரப்பினை எடுத்துரைப்பதற்கு நியாயமானதொரு வாய்ப்பினை கொடுத்ததற்குப் பின்னர் தவிர, அத்தகைய ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

குறைபாடுகளால் இம்மன்றத்தின் நடவடிக்கைகள் செல்லத் தகாதவையாக ஆக்கப்படுதல் ஆகாது.

**22.** உறுப்பினர் பதவியில் காலியிடம் ஏதேனும் இருந்தபோதிலும் அல்லது இம்மன்றத்தின் அமைப்புருவாக்கத்தில் குறைபாடு ஏதேனும் இருந்தபோதிலும், இம்மன்றம் செயலாற்றுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருக்கும்; மற்றும் ஓர் உறுப்பினராக இருப்பதற்கு உரிமைத் தகுதி உடையவராக இல்லாத எவரேனும் ஒருவர் இம்மன்றத்தின் நடவடிக்கைகளில் அமர்ந்தார் அல்லது வாக்களித்தார் அல்லது மற்றபடி பங்குபெற்றார் என்கின்ற போதிலும், இம்மன்றத்தின் நடவடிக்கைகள் செல்லத் தக்கனவாக இருக்கும்.

இம்மன்றத்தின் உறுப்பினர்களும் பணியாளர்களும் பொது ஊழியர்களாக இருப்பர் என்பது.

மையச் சட்டம் XLV/1860.

**23.** இம்மன்றத்தின் தலைவர், துணைத் தலைவர், உறுப்பினர்கள், உறுப்பினர்–செயலாளர், பிற பணியாளர்கள் ஆகியோர் இந்தச் சட்டத்தின் வகைமுறைகளில் ஏதொன்றையும் அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை விதி அல்லது ஆணை அல்லது பணிப்புரை ஏதொன்றையும் தொடர்ந்து செயற்படும்போது அல்லது செயற்படுவதாகப் புலப்படும்போது இந்தியத் தண்டனைச் சட்டத்தின் 21–ஆம் பிரிவில் பொருளின்படி பொது ஊழியர்களாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

நல்லெண்ணத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

**24.** இந்தச் சட்டத்தையோ அல்லது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி அல்லது ஒழுங்குமுறை விதி, ஆணை அல்லது பணிப்புரை ஏதொன்றையும் தொடர்ந்து நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யக் கருதப்படும் எதனைப் பொறுத்தும் அரசு, மன்றம் அல்லது அதன் உறுப்பினர் எவருக்கும் எதிராகவோ அல்லது அரசு அல்லது மன்றத்தின் பணிப்புரையின்படி செயற்படுகின்ற பணியாளர்கள் அல்லது நபர் எவருக்கும் எதிராகவுமோ, உரிமையியல் வழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடர்வதற்கு இடமில்லை.

விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

**25. (1)** அரசானது இந்தச் சட்டத்தின் நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது அவற்றுள் எவற்றையுமோ நிறைவேற்றுவதற்கான விதிகளைச் செய்யலாம்.

(2) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவையில் வைக்கப்படுதல் வேண்டும்; மற்றும் அது அவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடரோ அல்லது அதற்கு அடுத்துவரும் கூட்டத்தொடரோ முடிவடைவதற்கு முன்பு அப்பேரவை அத்தகைய விதி, ஆணை அல்லது அறிவிக்கை எதிலும் மாறுதல் எதனையும் செய்யுமாயின் அல்லது அப்பேரவையானது, அந்த விதி அல்லது ஆணை அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் கூடாது என்று முடிவு செய்யுமாயின் அவ்விதி அல்லது அந்த ஆணை அல்லது அந்த அறிவிக்கை அதற்குபின்னர் அவ்வாறு மாறுதல் செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நேர்விற்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும். எனினும், அத்தகைய மாறுதலோ அல்லது நீக்கமோ அந்த விதி, ஆணை அல்லது அறிவிக்கையின்படி முன்னர் செய்யப்பட்ட ஏதொன்றின் செல்லும் தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

ஒழுங்கு முறை விதிகளைச் செய்வதற்கான அதிகாரங்கள்.

26. இம்மன்றமானது, அரசினால் செய்யப்படும் விதிகள் எவற்றுக்கும் உட்பட்டும் அரசின் முன் ஒப்புதலளிப்புடனும், இந்தச் சட்டத்தின்படி இம்மன்றத்திற்குள்ள அதிகாரங்களையும் அலுவல்களையும் நிறைவேற்றுவதற்கான ஒழுங்குமுறை விதிகளைச் செய்யலாம்.

இடர்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

27. இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயற்படுத்துவதில் இடர்பாடு ஏதேனும் எழுமானால், அரசு, ஆணையின் மூலம் அந்த இடர்பாட்டை நீக்குவதற்குத் தேவையானதாகவோ அல்லது உகந்ததாகவோ அதற்குத் தோன்றுகிறவாறான, இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத அத்தகைய வகைமுறையைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆனால் அத்தகைய ஆணை எதுவும் இந்தச் சட்டம் தொடங்கிய தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகால அளவு முடிவடைந்ததற்குப் பின்னர் செய்யப்படுதல் கூடாது.

40/1992 எனும் எண்ணிட்ட தமிழ்நாடு சட்டத்திற்கான திருத்தங்கள்.

28. 1992–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தில்,— தமிழ்நாடு சட்டம் 40/1992.

(1) 1–ஆம் பிரிவில், (3)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக, பின்வருவது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

"(3) இது, 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி தவிர பிற அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்குப் பொருந்தும்.";

(2) 2–ஆம் பிரிவில்,—

(i) (c) -எனும் கூறில் "மேலாண்மை அறிவியல், கீழ்த்திசை மொழிகள், பொறியியல் தொழில்நுட்பவியல்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, "கீழ்த்திசை மொழிகள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (f)-எனும் கூறில் ''தொழில்நுட்பக் கல்வியாயினும் அல்லது வேறு கல்வியாயினும்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக "அல்லது வேறு கல்வியாயினும் (2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டவாறான தொழில்நுட்பக் கல்வி அல்லாத பிற)'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(iii) (j) - எனும் கூறில்,—

(a) "அண்ணா பல்கலைக்கழகம்'' என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) ''1956–ஆம் ஆண்டு பல்கலைக் கழக மானிய ஆணையச் சட்டம் பொருந்துகிறதாய் உள்ள'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பின்னர் ''ஆனால், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலத் தொழில்நுட்பக் கல்வி மன்றச் சட்டத்தில் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளவாறான தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை உள்ளடக்காது'' என்னும் சொற்றொடரானது சேர்க்கப்படுதல் வேண்டும்;

(3) 4–ஆம் பிரிவில் (g)–எனும் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(4) 10–ஆம் பிரிவில்—

(i) (1)–ஆம் உட்பிரிவில், ''ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிலையங்கள்'' என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ''ஆராய்ச்சி மற்றும் அறிவியல் நிலையங்கள்'' என்னும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(ii) (2)–ஆம் உட்பிரிவில்,—

(a) (q)-எனும் கூறில், ‘‘மற்றும் தொழில்நுட்பம்” என்று வருகின்ற சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்;

(b) (s)–எனும் கூறுக்குப் பதிலாக, பின்வரும் கூறானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

“(s) பல்கலைக்கழக அமைப்பிற்கு உள்ளேயாயினும் அல்லது வெளியேயாயினும் முதன்மை அறிவுசார்துறைகளில் சிறப்புமிகு நிலையங்களைத் தோற்றுவித்தல் வேண்டும்;’’;

(c) (x)–எனும் கூறில், ‘‘அறிவியலாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்கள்’’ என்று வருகின்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘அறிவியலாளர்கள் மற்றும் கல்வியாளர்கள்’’ என்றும் சொற்றொடரானது அமைக்கப்படுதல் வேண்டும்;

(d) (ab)–எனும் கூறானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 31–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன் மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 5/2010**

***2009ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும், மாநிலத் தொகுநிதியத்திலிருந்து மேலும் குறிப்பிட்ட சில தொகைகளை ஒதுக்கீடு செய்ய வகை செய்வதற்கானதொரு சட்டம்.***

இந்திய குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

**1.** (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டம் என வழங்கப் பெறும். குறுந்தலைப்பு.

**2.** மாநில அரசு, 2009-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும், நோக்கங்களுக்காகவும் தேவை படுகிற நான்காயிரத்து எழுபத்தெட்டு கோடியே அறுபத்திரண்டு இலட்சத்து இருபத்தொன்பதாயிரம் ரூபாய்க்கு மேற்படாத மேலுமானதொரு தொகையை–

2009–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளில் தொடங்கிய நிதியாண்டின் பணிகளுக்காகவும் நோக்கங் களுக்காகவும் மாநிலத் தொகுநிதியத்தி லிருந்து துணை நிதி ஒதுக்கம் செய்தல்.

*(a)* இணைப்புப் பட்டியலின் (3)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காகத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் வழங்கப்பட்ட துணை மானியங்களையும் ;

*(b)* இணைப்புப் பட்டியலின் (4)–ஆம் கலப்பத்தியில் (column) அறிவித்துள்ளவாறு, அந்த ஆண்டிற்காக மாநிலத் தொகுநிதியத்திற்குச் சாட்டப்பட்ட துணைச் செலவினத்தையும் ;

எதிர்கொள்வதற்காக மாநிலத் தொகுநிதியத்திலிருந்து ஒதுக்கீடு செய்யலாம்.

## இணைப்புப் பட்டியல்

(2ஆம் பிரிவைக் காண்க.)

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும். | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 1 | மாநில சட்டமன்றம் | வருவாய் | 8,77,000 | ... | 8,77,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 2 | ஆளுநர் மற்றும் அமைச்சரவை | வருவாய் | 54,26,000 | ... | 54,26,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 3 | நீதி நிருவாகம் | வருவாய் | 15,04,000 | *1,82,54,000* | 1,97,58,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 4 | ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | வருவாய் | 6,71,09,000 | ... | 6,71,09,000 |
| | | மூலதனம் | 1,39,20,000 | ... | 1,39,20,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 5 | வேளாண்மைத் துறை | வருவாய் | 246,50,91,000 | ... | 246,50,91,000 |
| | | மூலதனம் | 14,95,03,000 | ... | 14,95,03,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 6 | கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 10,30,00,000 | ... | 10,30,00,000 |
| | | மூலதனம் | 17,00,000 | ... | 17,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 7 | மீன்வளம் (கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 82,18,91,000 | ... | 82,18,91,000 |
| | | மூலதனம் | 51,25,000 | ... | 51,25,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 8 | பால்வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன்வளத் துறை) | வருவாய் | 2,39,80,000 | ... | 2,39,80,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 9 | பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | வருவாய் | 26,56,40,000 | ... | 26,56,40,000 |
| | | மூலதனம் | 8,62,41,000 | ... | 8,62,41,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 10 | வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 2,37,66,000 | ... | 2,37,66,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 11 | முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) | வருவாய் | 16,69,00,000 | ... | 16,69,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 12 | கூட்டுறவு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 268,92,42,000 | ... | 268,92,42,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 13 | உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு (கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை) | வருவாய் | 1,204,67,58,000 | ... | 1,204,67,58,000 |
| | | மூலதனம் | 4,39,00,000 | ... | 4,39,00,000 |
| | | கடன் | 250,00,00,000 | ... | 250,00,00,000 |

| | | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும் | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 14 | எரிசக்தித் துறை | வருவாய் | 12,09,00,000 | ... | 12,09,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 15 | சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | வருவாய் | 1,60,83,000 | *47,22,000* | 2,08,05,000 |
| | | மூலதனம் | 33,03,72,000 | ... | 33,03,72,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 16 | நிதித் துறை | வருவாய் | 1,08,76,000 | ... | 1,08,76,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 17 | கைத்தறி மற்றும் துணிநூல் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | 3,70,78,000 | ... | 3,70,78,000 |
| | | கடன் | 2,12,70,000 | ... | 2,12,70,000 |
| 18 | கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் (கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை) | வருவாய் | 21,04,09,000 | ... | 21,04,09,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 12,00,00,000 | ... | 12,00,00,000 |
| 19 | மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | வருவாய் | 328,04,63,000 | ... | 328,04,63,000 |
| | | மூலதனம் | 10,00,000 | ... | 10,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 20 | உயர் கல்வித் துறை | வருவாய் | 61,56,59,000 | ... | 61,56,59,000 |
| | | மூலதனம் | 2,06,63,000 | ... | 2,06,63,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 21 | நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை | வருவாய் | 40,43,000 | ... | 40,43,000 |
| | | மூலதனம் | 10,000 | ... | 10,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 22 | காவல் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 10,73,10,000 | ... | 10,73,10,000 |
| | | மூலதனம் | 1,000 | ... | 1,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 23 | தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 15,51,78,000 | ... | 15,51,78,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 24 | சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 40,25,000 | ... | 40,25,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 25 | இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்— நிருவாகம் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 1,37,19,000 | ... | 1,37,19,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 26 | வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | வருவாய் | 26,74,000 | ... | 26,74,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 98,56,54,000 | ... | 98,56,54,000 |

... ... ...



| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் | | |
|---|---|---|---|---|---|
| | | | சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 27 | தொழில் துறை | வருவாய் | 440,69,25,000 | ... | 440,69,25,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 40,65,29,000 | ... | 40,65,29,000 |
| 28 | செய்தி மற்றும் விளம்பரம் (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 6,23,40,000 | ... | 6,23,40,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 29 | சுற்றுலா—கலை மற்றும் பண்பாடு (சுற்றுலா மற்றும் பண்பாட்டுத் துறை) | வருவாய் | 1,28,70,000 | ... | 1,28,70,000 |
| | | மூலதனம் | 1,67,00,000 | ... | 1,67,00,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 31 | தகவல் தொழில் நுட்பவியல் துறை | வருவாய் | 250,00,00,000 | ... | 250,00,00,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 32 | தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை | வருவாய் | 3,76,83,000 | ... | 3,76,83,000 |
| | | மூலதனம் | 2,000 | ... | 2,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 34 | நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | வருவாய் | 12,78,04,000 | ... | 12,78,04,000 |
| | | மூலதனம் | 1,20,00,000 | ... | 1,20,00,000 |
| | | கடன் | 8,20,00,000 | ... | 8,20,00,000 |
| 35 | பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | வருவாய் | 42,60,000 | ... | 42,60,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 36 | திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை | வருவாய் | 22,69,000 | ... | 22,69,000 |
| | | மூலதனம் | 5,36,48,000 | ... | 5,36,48,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 37 | மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) | வருவாய் | 17,32,000 | ... | 17,32,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 38 | பொதுத் துறை | வருவாய் | 47,23,60,000 | ... | 47,23,60,000 |
| | | மூலதனம் | 2,73,01,000 | ... | 2,73,01,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 39 | கட்டடங்கள் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 74,45,000 | ... | 74,45,000 |
| | | மூலதனம் | 14,000 | ... | 14,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 40 | பாசனம் (பொதுப்பணித் துறை) | வருவாய் | 6,03,38,000 | ... | 6,03,38,000 |
| | | மூலதனம் | 3,01,10,000 | ... | 3,01,10,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 41 | வருவாய்த் துறை | வருவாய் | 9,46,000 | ... | 9,46,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் — சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| 42 | ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | வருவாய் | 136,89,56,000 | ... | 136,89,56,000 |
| | | மூலதனம் | 47,00,02,000 | ... | 47,00,02,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 43 | பள்ளிக் கல்வித் துறை | வருவாய் | 51,97,06,000 | ... | 51,97,06,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 44 | குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் நிறுவனங்கள் துறை | வருவாய் | 1,75,00,000 | ... | 1,75,00,000 |
| | | மூலதனம் | 15,15,000 | ... | 15,15,000 |
| | | கடன் | ... | ... | ... |
| 45 | சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை | வருவாய் | 20,07,000 | ... | 20,07,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 46 | தமிழ் வளர்ச்சி (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 1,22,02,000 | ... | 1,22,02,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 47 | இந்து சமய அறநிலையத் துறை (தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தித் துறை) | வருவாய் | 1,000 | ... | 1,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 48 | போக்குவரத்துத் துறை | வருவாய் | ... | ... | ... |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | 142,00,00,000 | ... | 142,00,00,000 |
| 49 | இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | வருவாய் | 2,42,75,000 | ... | 2,42,75,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 50 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | வருவாய் | 3,000 | ... | 3,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| 51 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர்தணிப்பு | வருவாய் | 92,17,81,000 | ... | 92,17,81,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |

| கோரிக்கை எண். | பணிகளும் நோக்கங்களும் | | கீழ்க்காணும் தொகைகளுக்கு மேற்படாமல் சட்டமன்றப் பேரவையால் வாக்களிக்கப்பட்டது. | *மாநிலத் தொகு நிதியத்திற்குச் சாட்டப்பட்டது.* | மொத்தம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | | (3) | (4) | (5) |
| | | | ரூ. | ரூ. | ரூ. |
| | ***கடன் செலவுகள்*** | வருவாய் | ... | *14,10,69,000* | 14,10,69,000 |
| | | மூலதனம் | ... | ... | ... |
| | | கடன் | ... | ... | ... |
| | | **வருவாய்** | **3,378,59,26,000** | ***16,40,45,000*** | **3,394,99,71,000** |
| | **மொத்தம்** | **மூலதனம்** | **130,08,05,000** | ***...*** | **130,08,05,000** |
| | | **கடன்** | **553,54,53,000** | ***...*** | **553,54,53,000** |
| | **பெருமொத்தம்** | .. | **4,062,21,84,000** | ***16,40,45,000*** | **4,078,62,29,000** |

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.